DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF ADDITIONAL MAHILA, TIRUVARUR.
***CC.No. 108 /2024 – P.W.7 (LW 9)***

| | | | |
|---|---|---|---|
| பெயர் | முருகானந்தம் | வயது | 55 |
| தகப்பனார் பெயர் | பொன்னுசாமி | ஜாதி | |
| தொழில் | காவல் சிறப்பு உதவி ஆய்வாளர், கூத்தாநல்லூர் | மதம் | |
| ஊர் | திருவாரூர் | தாலுக்கா | திருவாரூர் |

**எதிரி நீதிமன்ற காவலில் உள்ளார். அவரது வழக்கறிஞர் முன்னிலை.**

**Solemnly affirmed in accordance with the provisions of sec 4 of OATH Act 1969 of on the day 06.03.2026**

**<u>அரசு தரப்பு முதல் விசாரணை</u>**

நான் தற்போது கூத்தாநல்லூர் காவல்நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணியாற்றி வருகிறேன். கடந்த 30.08.2022 அன்று திருவாரூர் தாலுக்கா காவல்நிலையத்தில் சிறப்பு உதவி காவல் ஆய்வாளராக பணிபுரிந்தபோது திருவாரூர் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையிலிருந்து கிடைக்கப்பெற்ற தகவலை பெற்று அங்கு உள் நோயாளியாக சிகிச்சையில் இருந்த திருவாரூர் புலிவலம் மாரியம்மன் கோவில் தெருவை சேர்ந்த பாப்பையன் மகள் குந்தவை நாச்சியார் என்பவரை விசாரித்து புகார் வாக்குமூலம் பெற்று நிலையம் வந்து நிலைய குற்ற எண். 339/2022 சட்டப்பிரிவுகள் 341, 294(b), 323, 506(1) இதச & 4 of TNPHW Act ன் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன். **(முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது).** இத்துடன் வழக்கு கோப்பினை மேல்விசாரணைக்காக உதவி காவல் ஆய்வாளர் திருமதி பாண்டியம்மாள் வசம் ஒப்படைத்தேன்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

28.08.2022 ம் தேதி சம்பவம் நடைபெற்றதாகவும், 30.08.2022 ம் தேதி தான் தகவல் கிடைக்கப்பெற்றது என்றால் சரிதான். புகார் வாக்குமூலத்தில் எதிரி எங்கள் தெருவை சேர்ந்தவர் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். சம்பவமானது இரவு 8.30 மணியளவில் நடைபெற்றது .

நடைபெற்றதாக சொல்லப்படும் சம்பவமானது எந்த விளக்கு வெளிச்சத்தில் நடைபெற்றதாக சொல்லப்படவில்லை என்றால் சரிதான். புலிவலம் பேருந்துநிறுத்தத்தில் இரவு 8.30 மணிக்கு பேருந்திலிருந்து இறங்கியதாக சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். புலிவலம் பேருந்து நிறுத்தத்திலிருந்து சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடத்திற்கு எவ்வளவு தூரம் என்றால் 100 மீட்டர் தூரம் இருக்கும். சுமார் 300 மீட்டர் தூரம் இருக்கும் என்று சொன்னால் 100 லிருந்து 150 மீட்டர் தூரம் தான் இருக்கும். மருத்துவமனையிலிருந்து தகவல் கிடைத்து நான் சென்றபோது முதலில் விபத்து பதிவேட்டை தான் முதலில் பெற்றேன் என்றால் சரிதான். மேற்படி விபத்து பதிவேட்டை பெற்ற பிறகுதான் அ.சா.1 டம் வாக்குமூலம் பதிவு செய்ய சென்றேன் என்றால் சரிதான். சம்பவம் புலிவலத்தில் நடைபெற்றதாக சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். புலிவலம் கிராமம் என்பது சுமார் 2 கி.மீ தூரம் சுற்றளவு கொண்டது என்றால் சரிதான். தவறான தகவலைக் கொண்டு கொடுக்கப்பட்ட வாக்குமூலத்திற்கு எவ்வித விசாரணையும் இன்றி நான் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

(ஒம்/– S. முஹம்மது பாசில்)
நீதித்துறை நடுவர்,
கூடுதல் மகிளா நீதிமன்றம்,
திருவாரூர்.